சைவ பரிபாலன சபை வெளியீடு;
ஆரம்பம்: விரோதி ஷு (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

செம்பிரித்தானியாவில்
பதிவு பெற்றது

இந்து சாதனம்

Hindu Organ

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

பிரதி விலை: சதம் 40

புத் - 92] யாழ்ப்பாணம்,- ரௌத்திரி ஷு மாசி மீ 20 - 2 - 81 வெள்ளிக்கிழமை [இல-32

SRI LANKA - JAFFNA
RECEIVED
1981-2-24
PERIODICALS DIVISION
CAMPUS

மாகில் விணையும் மாமெய்யமும்' விசுதென்றலும் விங்கிள வேனிலும், முகவண்டறை பொய்கையும் போன்றதே. ஈசனெந்தை யிணையடி நீழலே.

சுத்தம் பேணுவதை நித்தம் நியமமாக்குவோம்

விஞ்ஞானத்தால் முன்னேற்றம் மேவி இருக்கும் இக் காலத்திலே அசுத்தத்தினாலே ஆபத்து விளைவிக்கும் நோய்கள் அநேகம் தோன்றுகின்றன. தொற்றுகின்றன என்றால் கல்வியால் நாங்கள் அடைந்த பயன் யாதாகும்?

சமய ஒழுக்கம் உள்ளும் புறமும் சுத்தத்தைக் கடைப்பிடிப்பதிலேயே தங்கியிருக்கின்றது.

புனிதம் என்பது மனிதனை ஏனைய உயிரினங்களிலிருந்து புறம்பாக்கி மேன்மைப்படுத்தும் ஒரு நியமக் கருமம்.

இந்த உண்மையை எடுத்து நாவலர் பெருமான் சைவ வினாவிடையிலேயே (சின்னஞ் சிறுவர்கள் கற்க வேண்டிய தரத்திலே) காலையில் எழுந்தவுடன் செய்வதென்ன, எவ்வாறு நித்திய கருமம் நிகழ்த்தல் என்றெல்லாம் வினாவும் விடையுமாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

நீர் நிலையைச் அசுத்தம் செய்தல் ஆகாது என்று அழுத்திக் கூறியிருக்கின்றார் உடம்பைச் சுத்தி செய்வதன் இன்றியமையாமையைக் காட்டியதுடன் உண்ணும்பொழுதும் உண்ட பின்னும் ஒரு ஒழுக்கநெறிச் சட்டத்தையும் இயற்றியிருக்கின்றார். இவற்றையெல்லாம் இப்பொழுது பாடசாலைகளிலே படிப்பிக்க மாட்டார்கள். மறுபடியும் சைவ வினாவிடை ஆரம்பக் கல்வித் திட்டத்தில் இடம்பெறுமானால் சுகாதாரம் என்ற பாடம் மேல் வகுப்புகளிலே கற்பிக்கப்படும்பொழுது பிள்ளைகள் அதனை உணர்ந்து விளங்கக் கூடியதாயிருக்கும்.

சமயிகள் தாங்கள் எப்படிச் சுத்தத்தைப் பேண வேண்டும் என்பதை இக் காலத்தில் எடுத்துக் காட்டுதல் அவசியமாகின்றது.

ஏராளமான அடியார்கள் கூடி ஒருங்கிருந்து சமயக் கிரமங்களிலே பங்குகொள்ளும் வேளைகளிலே சுத்தம் பேணப்படுதல் மிக மிக அவசியம்.

உணவும் உடையும் சுத்தமாகவும் உறங்கும் இடம் புனிதமாகவும் உட்கொள்ளும் நீர் தூயதாகவும் இருத்தலை விழாக்காலங்களிலே கவனிப்பதற்குத் தொண்டர்கள் துணிந்து முன்வருதல்வேண்டும்.

சில காலமாக வாந்தி பேதி நோய் ஆங்காங்கு பரவி வருதலை எல்லோரும் அறிவர். எங்கே இந்நோய் இருக்கின்றது என்று திட்டவட்டமாக எங்கும் அறியாதிருந்தமையாலும் எவ்வகையிலே தொற்று நோயாக மாறுகின்றதென்பதை மருத்துவப் பகுதியார் பிரத்தியேகமாக விளம்பரப்படுத்துவதிலே தாமதஞ் செய்தமையாலும் எல்லோரும் மிகக் கவனமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

சிவராத்திரி தீர்த்தம்

இன்னும் சில நாட்களிலே புண்ணிய மகாதீர்த்தத்திற்காகத் திருக்கேதீச்சரம்போன்ற திவ்வியதலங்களுக்குப் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் செல்வார்கள். வாந்திநோய் மறைமுகமாக எங்கேனும் இருந்தால் ஆபத்து விளைவதற்கிடமுண்டாகும். எனவே அடியார்கள் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். நீர் சுத்தமாயிருத்தல் நீர் நிலையைச் சுத்தமாகப் பேணுதல் காலைக் கடன் தீர்க்கும் கருமத்துக்குரிய இடங்களைப் புறம்பாக்கி சுத்தமாய் வைத்

(வளர்ச்சி 8ம் பக்கம்)

சிவராத்திரி பாத யாத்திரை

மன்னார் இந்து சமய வளர்ச்சிக் கழகமும் திருக்கேதீச்சரம் சைவ வளர்ச்சிக் கழகமும் ஒருங்கிணைந்து மேற்படி பாத யாத்திரையை நடாத்துகின்றது 1-3-81 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு மன்னார் சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு வங்காலை நறுவிலிக்குளம் ஊடாக இரவு நானாட்டான் வடைந்து மறு நாள் 2-3-81 திங்கட்கிழமை காலை செயமணி திருமுருங்கன் குறிஞ்சாக்குளம் வட்டக்கண்டல் ஊடாக இரவு பரப்புக்கடத்தானையடைந்து மறு நாள் 3.3.81 செவ்வாய்க்கிழமை காலை பிள்ளையார்பிட்டி ஆண்டாங்குளம் தெடுங்குளம் அடம்பன் நரமரைக்குளம் வேட்டையாமுறிப்பு பரப்பாரோட்டை ஊடாக மாலை 5 - 30 மணிக்கு திருக்கேதீச்சர தேவதானத்தை வந்தடையும். 4 - 3 - 81 புதன்கிழமை மகா சொராத்திரி நாளாகும்; ——

சிவானந்த நடனம் நூல் வெளியீடு

—○—

நவாலியூர் சோ. நடராஜன் தமிழாக்கஞ் செய்த கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் பிரசித்திபெற்ற "சிவானந்த நடனம்" என்ற நூலைத் தமிழ் நாடு அரசு தமது சேவையில் வெளியிட்டு 1981 ம் ஆண்டு முதலாம் மாதம் 15ம் திகதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் வெகுவிமரிசையாக அரங்கேற்றம் செய்தது. கூட்டத்துக்கு ம. பொ. சிவஞானக் கிராமணியார் தலைமை வகித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் நூலைக் கையேற்று, அரசாங்கம் நூலில் ஆயிரம் பிரதிகள் வாங்குமெனக் கூறி, அறிஞர் நவாலியூர் நடராசனைப் பாராட்டினார். கோட்டம் வள்ளுவர் விழா கொண்டாடியபோது இவ்வைபவம் இடம் பெற்றது. நடராசன் இவ்வரும்பணியை தமிழக அரசு நிறைவேற்றிய தற்கு நன்றி தெரிவித்தார். தமிழ்நாடு அரசு மேலும் இருநூல்களை மொழி பெயர்க்குமாறு பணித்தது, இவற்றிலொன்று இலங்கை வரலாற்றைக் கூறும் பழைய காவியமான மகாவம்சம், இலங்கைக் கலாசார மந்திரி திரு. ஹுருலே திரு. நடராசனைப் பாராட்டி இந்த மகத்தான தொண்டை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி தெரிவித்தார்.

ஏற்கனவே நவாலியூர் நடராசன், தம்மபதம், சூத்திர காவியம், சித்தார்த்தர் போதித்த அறம் முதலிய நூல்களை எழுதி கையெழுத்துப் பிரதிகளை மரண்பு மிகு-ஜனாதிபதி ஜே.ஆர், ஐயவர்த்தனாவிடம் 1980 பன்னிரண்டாம் மாதம்15 இற் கையளித்தார், ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்ததுடன் இந்நூல்களை உடனடியாகப்பிரசுரிக்குமாறு கலாசார மந்திரியை பணித்தார், கலாசாரத

வளர்ச்சி 3ம் பக்கம்

ஆராய்ச்சி மாநாட்டு அமைப்பு ஆராய்ச்சிக்கிடமானதா?

எண்ணிய எண்ணம் என்ன? இலங்கிய வண்ணம் என்ன? எழுந்த பயன்தான் என்ன? இவ்வாறு தமிழ் அன்பர்கள் இதயங்களில் எழுகின்றன பல வேறு கேள்விகள்.

இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளைப்பற்றி இந்திய நாட்டுச் செய்தித் தாள்கள் எடுத்துக் கூறியவற்றையும் இந்நாட்டு ஏடுகள் எழுதியவற்றையும் ஒருங்கமைத்து உற்று நோக்குமிடத்தில் இவற்றையெல்லாம் ஆராய்ந்து ஒரு அறிக்கை வெளியிடுவதற்கோர் ஆராய்ச்சிக் குழு அமைக்கப்படுவதன் அவசியம் தோன்றுகின்றது.

நினைத்தது ஒன்று; நிகழ்ந்தது இன்னொன்று. நீள் உலகம் அறிய நிற்கின்றது பிறிதொன்று;

பேராளர்கள் யார் பேசினார்கள். அல்லாதார் ஆர் அங்கு இடை புகுந்தார்கள்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

அநுமதிக்கப்பெற்றன எத்தனை? எவை?

குறிப்புரைகள் கூறியவர்கள் குறிக்கோளுக்கப்பாற் குறித்துக் குப்பையைக் குழப்பினது உண்மைதானா?

தமிழ் மொழி ஆராய்விலே தனிச் சால்பு ஒன்றுண்டல்லவா? அது வரலாற்றுப் பெருமையுற்றமுச் சங்கங்களின் முடிபு. முன்பேயுள்ள நெறியைப் பின்பற்றாத ஆராய்ச்சிமாநாடு ஆராய்ச்சி மாநாடு ஆகுமா?

ஆராய்ச்சிக்குரியதாய் எழுந்தவை இன்னவை என்றும் அவற்றில் எழுந்த ஆராய்ச்சி இவை என்றும் அவ்வித ஆராய்ச்சிகள்பற்றிய ஆய்வுரைகள் இவை இவை என்றும் தொகுப்பு ஒன்று வெளியிடப்படின் இங்கு இக் கட்டுரையில் எழுந்த ஐயங்கள் எல்லாம் எழ வேண்டியன என்ற உண்மை புலப்படும்.

சங்கச் சான்றோர் அங்கு ஆராய்ந்த கலைத்திறனை மீண்டும் இங்கே எடுத்து அழுத்தியுரைத்தல் பொருத்தமாகும்.

முன் சென்ற மூதறிஞர்களின் முறையைப் பின்பற்றும் மாநாடு ஒன்று வழி வகுக்கப்படுதலின் இன்றியமையாமையை இனி எடுத்து விரிப்பாம்.

[வளரும்.]

சிந்தனைக்குகந்த திருத்தொண்டர் எடுத்துரைத்தன

(இளஞ் சைவப்புலவர் இ. சிறிதரன்)

உலகின்கண்ணே மக்களை மக்களாக வாழவைப்பது அன்பும் அருளுமேயாகும். மக்களை நன்னெறியில் அழைத்துச் செல்வது அன்பும் அருளுமேயாகும். இந்த இரண்டும் இல்லையேல் நாம நரகத்திற்கே செல்லுதல் வேண்டும். "அருளும் அன்பும் நீக்கி நீங்கா நிரயம் கொள்பவர்" என்று புறநானூறு பேசுகின்றது. அன்பும் அருளும் பெற்று நிலைபேறான கதியை யடைந்து வாழ்ந்து காட்டியவர் அப்பரடிகள்.

"தன்கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கிரியாவாரர்க்கத்தைத் தழுவி நின்றவர் திருநாவுக்கரசுநாயனார். இறைவனுக்கு தொண்டு செய்வதிலேயே தமது வாழ்நாளைக் கழித்தவர் நாவுக்கரசர். வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். அது மிகவும் அவசியம். "குறிக்கோளில்லாது கெட்டேனே" என்று வருந்துகின்றார்.

(வளர்ச்சி 8ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ராவினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

ரௌத்திரி ஞு மாசி மீ
20 - 2 - 81 வெள்ளி

புனித உள்ளம் படைத்த வனிதையர் திலகம்

மனித குலத்தின் மாண்பினை எடுத்து இனிது உரைத்திருக்கின்றனர் சைவ சாத்திரங்களையும் திருமுறைகளையும் திருவருட் பொலிவாக உலகுக்கு உவந்தளித்த ஆசாரியர்கள் குரவர்கள் அடியார்கள்.

தருமமே தலைசிறந்த கருமம் என்பதைப் பொருளாகக்கொண்ட சைவசமய நூல்கள் அறம் என்பதென்ன, அது எவ்வாறு ஆற்றப்படுதல் வேண்டும், அமைந்த அறம் எவ்வகையிற் பேணப்படுதல் வேண்டும் என்றெல்லாம் ஆராய்ந்து விளக்கியிருக்கின்றனர்.

கொடை வள்ளல்களாகக் குவலயம் மதிக்க அறஞ்செய்த அடியார்களின் தருமங்களைப் பேணிப் பயன்படுத்தும் கடமையின் இன்றியமையாமையைப் பற்றி நாவலர் நற்றகையார் நன்கெடுத்துக் காட்டியதும் அன்றி வழிகாட்டியாகவும் வாழ்ந்து காட்டினர்.

இத்தகைய தத்துவத்தை உணர்ந்த மாதுசிரோமணியார் ஒருவர் புண்ணிய நாச்சி அம்மை என்ற அரும் பெயர் தாங்கி அந்நாமத்தைக் கண்ணியப்படுத்தும் வகையில் அறம் பல செய்து விளங்கினர்.

இத்தருமத்தின் உத்தமத்தை உணர்ந்த சைவ பரிபாலன சபையார் தங்கள் சமயத்தொண்டின் நன்னெறிக்கு ஏற்றதிது என வெண்ணி, அந்த அறங்காவற் கடமையைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு அப் புண்ணிய மாதின் எண்ணம் நின்று நிலவும் வகையில் அப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிவதருமம், சிவதீட்சைக் கருமத்தைச் செவ்வனே மக்கள் மத்தியில் நிகழவைத்தலையும் சைவ சாதனங்களை அடியார்கள் அமைத்துக்கொள்வதற்காவன செய்தலையும் சிவாசாரியர்கள், புராணிகர்கள் ஓதுவார்கள் ஆகிய பெருமக்களை ஆதரிக்கும் பணியை யியற்றலையும் ஆலயத் தொண்டினைச் சாலவும் சீராக்கி நிற்றலையும் குறிக்கும்.

இந்த வகையிலே சைவ பரிபாலன சபையார் சிவதீட்சைத் தருமத்தை முதலாக வைத்துப் புராண படனம் குருபூசை முதலியனவற்றையும் ஆலய பரிபாலனங்களையும் நன்கியற்றி வருகின்றனர்.

முன் அமைந்த அறத்தின் நிருவாகத்தைமட்டுஞ் செய்வதோடமையாது பின்னும் பல பொருத்தமானவற்றைப் புண்ணியநாச்சி தருமத்தின் நினைவாக நிருவகித்தல் சபையின் கடமையாகும்.

புண்ணியம் செய்வது போலப் பாவவழியிற் புகாதிருக்கத் தொண்டு புரிதலும் வேண்டப்படும்.

கொலை என்ற ஆகாத செயலைப்பற்றி ஆதாரங் காட்டி நாம் எடுத்து அதுவிலக்கப்படுதல் வேண்டும் என்று கூற வேண்டியதில்லை.

கொல்லானையும் புலாலை மறுத்தானையும் குவலயம் உண்மையாகப் போற்றி நிற்கும் ஒரு நிலையையை உண்டாக்குதல் வேண்டும்.

எனவே புண்ணியநாச்சி அம்மையார் நினைவுநாளில், மாசித் திங்களில நாமெல்லாம் புனித நினைவையும் புனிதப் பணியையும் மனித சமூகத்துக்கெடுத் துரைத்தல வேண்டும்.

ஆனின த்தை அழியாது காக்கின்ற கடமை இப்பொழுது அத்தியாவசியம் ஆகின்றது. ஐந்து பொருட்கள் தந்து எந்தையீசன அருச்சனைக்காக வாழும் இந்தப் பசு என்ற இனம் அழிந்தொழிந்து போகும் வகையில் பாக்களாய் மாறும் மக்களாலே கொலை செய்யப்பட்டு வருவதைத் தடுக்க எடுக்கும் பணியே புண்ணிய நாச்சியாரை எண்ணுவதற்குகந்த இயக்கம் என்போம்,

——

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

ஒரு சிறு தொகுப்புரை

— "வி. சி." —

ஐந்தாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு பைந்தமிழின் பழம் பெருமையும் புகழுமிக்க மதுரை மாநகரிலே கோலாகலமாக சனவரி 4 — 10ம் திகதி வரை நடைபெற்றது. தமிழகம் உட்பட ஏறத்தாழ 40 நாடுகளிலிருந்தும் பல அறிஞர்களும் பிரமுகர்களும், பிறரும் இதிலே பங்குபற்றினர். உலகத்தமிழாராய்ச்சி மன்றம் தமிழ்நாடு அரசாங்கம் குறிப்பாக முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி இராமச்சந்திரனும் அவருடைய ஆதரவாளரும் உதவியாளரும் இம்மாநாடு நன்கு நடைபெற ஒழுங்குகளை ஏற்படுத்தியிருந்தனர். சோமசுந்தரக்கடவுளும் அங்கயற்கண்ணியும் எழுந்தருளியிருக்கும் பழம்பெரும் புராணமிக்க மதுரை மாநகர் ஒருவாரத்திற்கு பெருஞ்விழாக் கோலம் பூண்டு மிளிர்ந்தது. மாநாட்டின் சார்பில் மதுரை மாநகர் புதுமெருகும் ஒழுங்குகளும் பெற்றிருந்தது.

இம்மாநாட்டு நிகழ்ச்சிகள் மதுரை மாநகரின் பல்வேறிடங்களிலே நடைபற்றன. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தினது தலைமைச் செயலகம் சென்னையிலுள்ள அடையாறு என்னுமிடத்தில் இருந்தாலும் இம்மகாநாட்டின் பிரதான நிருவாக ஒழுங்குகளும் வெளிநாட்டுப் பேராளர்க்கான விடுதிச்சாலை வசதிகளும் ஆராய்ச்சிக்கட்டுரைகள், பேச்சுக்கள், கலந்துரையாடலுக்கான ஒழுங்குகளும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலே வகுக்கப்பட்டிருந்தன, கவியரங்குகள், விவாதங்கள் முதலியன மதுரை மாநகரிலுள்ள தமுக்கம் எனுமிடத்திலுள்ள பந்தயத்திடலில் நடைபெற்றன. கலைநிகழ்ச்சிகள் இரவுகளிலே இவ்விடத்திலும் வேறு சில அரங்குகளிலும் நடைபெற்றன.

முற்பகல் இடம் பெற்ற ஆய்வுக்கட்டுரைகள், பேச்சுக்கள் மதுரைக்காமராசர் பல்கலைக்கழக வளவிலிதற்கென அமைக்கப்பட்ட தொல்காப்பியர் அரங்கில் இடம்பெற்றன. இவ் ஆய்வரங்கினைச் சிலவேளைகளிலே சாதாரண பேச்சாளரும் பயன்படுத்தினர். பிற்பகல் வேளைகளிலே மதுரைப்பல்கலைக் கழகத்திலுள்ள விரிவுரை அறைகளிலே சிறுகுழுக்களாக ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பட்டுக் கலந்துரையாடப் பெற்றன. தமிழியலின் பல்வேறு அம்சங்கள் இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, நாகரீகம், பண்பாடு பிற மொழித் தொடர்புகள், எழுத்துச் சீர் திருத்தம் எனப்பல துறைபற்றிய 300 கட்டுரைகள் அளவில் இடம்பெற்றன. இவற்றை உலகெங்கிலுமுள்ள தமிழறிஞர் பலர் சமர்ப்பித்தனர். ஆனால் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள சில முக்கியமான தமிழறிஞர்களுடைய கட்டுரைகள் இடம் பெருமை கவலைக்குரிய விஷயமொன்றாகும் மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுரைகளிலே சில தக்கவாறு குறிப்பிட்ட விடயத்துக்களில் ஒழுங்குபடுத்தப்படவில்லை, ஆய்வுக் கட்டுரைகள் பல நூற்றாண்டுகளாகப் பதிவு செய்யப்பட்டோ அல்லது பிரசுரிக்கப்பட்டோ வழங்கப்பட்டில இதனாற் பல அறிஞர் மூலக்கட்டுரைகளையே வாசிக்க வேண்டியிருந்தனர். ஒருசிலர் மூலக் கட்டுரைகளின் பிரதி இன்மையால் அவை வாசிக்கப்பட்டில மாநாட்டின் பல வேறு நிகழ்ச்சி நிரலிலே ஆய்வுக் கட்டுரைகள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்படவில்லையெனச் சில பேராளர் கவலையுற்றிருந்தனர்.

மாநாடு 6ம் திகதி மாலை மதுரையிலுள்ள தமுக்கத்திலே தமிழக ஆளுனர் மேன்மைதங்கிய சாதிக் அலி அவர்களாலே தொடக்கிவைக்கப்பட்டது. இறுதி நாளான 10ம் திகதி நிகழ்ச்சிக்குப் பாரதப் பிரதமர் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்கள் சமுகமளித்துச் சிறப்பித்தார். அன்றையதினம் தமிழ்ப்பண்பாட்டின் சில அம்சங்களை குறிக்கும் அலங்கார ஊர்திகளின் பெரிய பவனியும் இடம்பெற்றது.

மாநாட்டின்போது குமரிக் கடல் எனும் புதியபடம் திரையிடப்பட்டது. சிறந்த பொருட்காட்சியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. மதுரையிலே சற்று முன்று நூற்றாண்டுகளுக்கு முன் ஆட்சி செய்த நாயக்கர் அமைத்த அரண்மனை புதுப் பொலிவு பெற்றது. ஒலி, ஒளியமைப்புச் சிறப்பாக இடம் பெற்றது. பல தமிழறிஞர்களுக்கும் மதுரையிற் சிலைகள் எழுப்பப்பட்டன. இலங்கையைச் சேர்ந்த நாவலர் பெருமான் வண்பிதா தனிநாயக அடிகள் சுவாமிஞானப்பிரகாசர் போன்றோருக்கும் சிலைகள் எழுப்பப்பட்டன.

மாநாட்டிலே ஆய்வாளர் மட்டுமன்றிப் பொது மக்களும் பங்கு கொள்ளும் வகையிலே கவியரங்குகளும், விவாதங்களும் குறிப்பாக கலைநிகழ்ச்சிகளும் மதுரை மாநகரின் வேறு இடங்களிலே இடம் பெற்றன கலைநிகழ்ச்சிகள் மாலவேளைகளில் தொடங்கி நள்ளிரவுவரை நடைபெற்றன, கர்நாடக இசைவாய்ப்பாட்டு, வாத்தியம், நாதஸ்வரம், தவில் பரதநாட்டியம், நாட்டிய நாடகம், கிராமிய இசை, நாடகங்கள் முதலியன. குறிப்பிடற்பாலன தமிழகத்திலே தலைசிறந்த கலைஞர்கள் இவற்றிலே சிறப்படைப் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். இவ்வாறு பல வேறுகலைகளும் சிறப்பானவகையிலே ஒருங்கிணைந்த மதுரையிலே நன்கு சோபித்தன. பலசிறப்பு நிகழ்ச்சிகள் ஒரே நேரத்திலிடம் பெற்றமையினாலே இரசிகர்கள் எதற்குச் செல்வதென்று சிந்திக்க வேண்டிய நிலையுமேற்பட்டது.

மகாநாட்டின் போது சிறப்பான மலர்ஒன்று வெளியிடப்பட்டது. உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின் தந்தையான வண பிதா தனிநாயக அடிகளின் நினைவாக இலங்கைக் கிளையினர் மலர் ஒன்று வெளியிட்டனர்; வேறு சிலநூல்களும் வெளியிடப்பட்டன. மாநாட்டின் போது மதுரை காமராசர் பல்கலைக்கழக வளவிலே தமிழகத்திலுள்ள பிரபலபுத்தக விற்பனையாளர் நித்திய நூல்களை ஓரளவு குறைந்த விலையிலே விற்பனை செய்தனர். தமிழிலே அண்மையில் வெளிவந்த நூற்றுக்கணக்கான பிரசுரங்களை ஒரே முறையிலே காணக்கூடியதாயிருந்தது. மேலும் மாநாடு சார்பான இலக்கியமான கலைநிகழ்ச்சிகளைத் தமிழகத்தின் அடைமாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரா ஆகியவற்றின் முதலமைச்சர்களோ அவர்களின் பிரதிநிதிகளோ தொடக்கி வைத்தமை குறிப்பிடற்பாலது இந்த ஒருவகையிலே திராவிட மாநிலங்களின் பண்பாட்டு ஒற்றுமையையும் காட்டுவதாகும்.

(வளர்ச்சி 8ம் பக்கம்)

சிந்தனைக்குகந்தன

1 - ம் பக்கத்து வளர்ச்சி

அப்பரடிகள், வியாபாரி பணம் சேர்ப்பதையும் மாணவர் கல்வியின் பெறுபேற்றையும், கலைஞர்கள் புகழையும் விரும்பி முயற்சிபண்ணுவர். அதுபோல சைவ சமயிகள் ஒவ்வொருவரும் திருத்தொண்டுசெய்வதன்மூலம் நல்ல நெறி சென்று இறைவனை அடையலாம் என்பது நாவுக்கரசர் கூறும் வாழ்க்கை நெறியாகும். அவர் "திருவங்கமாலை" என்ற பதிகத்திலே எமது ஒவ்வொரு உடலுறுப்பும் ஆண்டவனுக்காகவே படைக்கப்பட்டது. அவ்வுறுப்புக்களை அவனை வழிபடுதலை விடுத்து வேறுவழியில் உபயோகப்படுத்தக் கூடாது என வலியுறுத்துகின்றார் அவர் கூறுவனவற்றைச் சற்றே நோக்குவாம்.

"தலையே நீ வணங்காய்" என்று முதற்கண் சிரசுக்கு வேலைகொடுக்கின்றார். சிலபேர் எதற்கும் தலைவணங்க மாட்டார்கள். முடிசார்ந்த மன்னரும் முடிவிற் பிடிசாம்பராவர்" எனபதை மறந்து விடுகின்றார்கள். எமது தேகம் இருக்கின்றதே அது வெறுந்தேகம் நாளையிருப்பது சந்தேகம் எனவே இந்த உடல் அழியுமுன் ஆன்மா ஈடேற்றத்துக்கான வழியில் உன்னைச் செலுத்தப் பழக்கிக்கொள் இறைவனைத் தலையினாலே வணங்கு. காந்தியடிகளின் மேசைமீது மூன்று குரங்குப் பொம்மைகள் இருக்கும் ஒன்று கண்ணை மூடியபடியும் ஒன்று வாயை மூடியபடியும் ஒன்று செவியை மூடியபடியும் இருக்கும். அதன் அர்த்தம் என்ன என்று கேட்டால் தீய விஷயங்களைக் கண்களாற் பார்க்காதே. பிறருக்குத் துன்பந் தரக்கூடிய தீய வார்த்தைகளை வாயினாற்பேசாதே உனக்குத் தேவையற்ற அநாவசியமான தீய விஷயங்களைச் செவிகளாற் கேட்காதே என்பதாகும். இவ்வாறு நாம ஒவ்வொருவரும் அவசியமற்ற தீய விஷயங்களை ஒதுக்கி வெறுத்து ஐம்புலன்களையும் ஆன்மீகத் துறைக்குத் திருப்பவேண்டும்.

கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை,
செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப்பிரான் திறம்
மூக்கே நீ முரலாய் முதுகாடுறை முக்கண்ணனை,
வாயே வாழ்த்துகண்டாய் மதயானையுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான்தனை
நெஞ்சே நீ நினையாய் நிமிர் புரிசடை நின்மலனை,
கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவி நின்று,
ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம் வந்து,
கால்களாற் பயனென் கறைக்கண்டனை உறகோயில்
சேரக் கோசரணம் குழாக் கால்களாற் பயனென்கொல்

இவ்வாறு நாவுக்கரசர் பெருமான் நமது உடல் உறுப்புக்கள் இறைவனுக்கே அர்ப்பணிக்கப்படவேண்டும் என்கின்றார். நலந்தீங்கினும் உன்னை மறந்தறியேன் உன்நாமம் என்னாவில் மறந்தறியேன்' என்று பிறிதோரிடத்திற் குறிப்பிடுகின்றார் அதுமட்டுமன்றி "நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே" என்றுங் கூறுகிறார்.

ஆகவே சைவ மக்கள் ஒவ்வொருவரும் நாவுக்கரசர் காட்டிய வழியிற் செல்ல வேண்டும் இறைவனைத் தலையினாலே வணங்கி, கண்களாற் பார்த்து அவன் புகழைச் செவியினாலே கேட்டு, வாயினாலே வாழ்த்தி கால்களாலே அவன் திருக்கோயிலை வலம்வந்து வணங்கி இவ்வுடம்பு எடுத்ததன் பயனைப் பெறுவோமாக.

——

புண்ணியநாச்சி அம்மை புனித தினம்

ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையார் நினைவு தினம் இந்த மாசி மாதம் 8 ஆம் நாள் (19-2-81) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் ஆதரவில் நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நடைபெற்றது. சிவபூஜா மண்டபத்தில் சிவபூஜையும், நாவலர் மண்டபத்தில் விசேடபூஜையும், கோவிற்புராணபடனமும், வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையார் பெயரில் அபிஷேகமும் மாகேசுர பூசை ஆச்சிரம மண்டபத்திலும் அமைந்து நடைபெற்ற பின்பு, மாலை நிகழ்ந்த பொதுக்கூட்டத்திற்கு சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. ச. செல்வராசா அவர்கள் தலைமை தாங்கினர். திருமுறை ஓதுதல் யாழ். இந்துக் கல்லூரி பண்ணிசை வகுப்பு மாணவர்களால் நிகழ்த்தப்பெற்றது "தருமமும் தத்துவமும்" என்ற பொருளில் திரு. க. சிவராமலிங்கம் B. A. அவர்களும் "புண்ணியநாச்சி அம்மையார்" பற்றி திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களும் "வன்னியர் அமைத்த சிவாலய மடதர்மம்" எனும் பொருளில் திரு. நா. செல்லப்பா அவர்களும், சமயப் பிரசாரகர் திரு. மு. மயில்வாகனம் அவர்களும் விரித்துஉரையாற்றினர். தலைவர் நிறைவுரையின்பின் நன்றியுரை நிகழ்ந்ததும் தேவாரத்துடன் நிகழ்ச்சி இனிது நிறைவெய்தியது.

தருமமென்றொன் றுண்டெனச் சாற்றின சால்புப்
பொருளினையே புண்ணியநாச்சி பூண்டு - கருமமெலாம்
ஆற்றினர், அம்மையவர் ஆண்ட அறத்தினைப்
போற்றினரும் புண்ணியரே போல்.

ஐந்தாவது உலக ; . . .

(2-ஆம்பக்கத்து வளர்ச்சி)

மாநாட்டின் போது பேராசிரியர்கள் ஆய்வரங்குகளுக்கும்கலை நிகழ்ச்சிகளுக்கும் செலுத்துவதற்கு இலவசமாக்குவதற்குவசதிகள் செய்யப்படவேண்டுமென்றன- மதுரைகுருசாமிபத்திரிகுளள நிலமுகவிய மான இடங்களுக்குச் சுற்றுலா ஒழுங்குகள் செய்யப்பட்டன. மாநாடு முடிந்தபின் 11—2-81 நிறுவரைதமிழகத்தின் நில பிரதான இடங்களுக்கு இராமேஸ்வரம், கன்னியாகுமரி -சுசீந்திரம் ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், சிதம்பரம், மாமல்லபுரம் முதலிய இடங்களுக்கு குறிப்பாக வெளிநாட்டுப் பேராசிரியர் பலர் சுற்றுலாவில் அழைத்துச் செல்லப்பட்டனர், அவர்களுக்கு ஆங்காங்குமக்கள் நல்வரவேற்பும் விருந்துபசாரங்களும் அளித்தனர்.

மாநாட்டின் போது தமிழகமரசினதும் மக்களினதும் சிறப்பான விருந்துபசாரமும், பண்பாடுஉச்சநிலையும் தெளிவாகக் காணப்பட்டன, ஆய்வரங்குகளைப்பொறுத்தவரை, சிலகுறைபாடுகளிருப்பினும் ஆய்வு முயற்சிகளுக்கு குறிப்பிடத்தக்கவைபண்பாடுடுரீதியில் ஒவ்வொரு நாடுகுறிப்பிடப்படாமலது தமிழகத்திலும், குறிப்பாக வெளிநாடுகளிலும் உள்ள தமிழருக்கு தனிச்சிறப்புள்ள பண்பாடொன்றுமிருப்பதை இம்மாநாடு உணர்த்திநெறிலாம், ஏதோகையில் தமிழியல் பற்றிஆராயும் பலவெளிநாட்டார்களையுமதலைமைந்த தமிழக்கலைஞர்களையும் ஒன்று சேர்க்கும் வகையிலும்இம்மாநாடு குறிப்பிடப்படாமலது இதுஒருபெரியதமிழப் பண்பாட்டு விழாவாகவும் கூறலாம்மேலும்- இலட்சக்கணக்கான மக்கள் நடமாடிய இம்மாநாட்டுக்கலைநிகழ்ச்சிகளின் பொதுப் பிரவேசநிறன் போதும் எவ்வகையான அசம்பாவிதங்களுமநடைபெறாமை தமிழகமக்களின் தமிழபற்றினையும் சமூகநலனையும் எடுத்துகாட்டுகிறதெனலாம் தமிழியல்ஆய்வு, பண்பாடுவளர்ச்சிபற்றியும் ஓரளவாவது இங்குகுறிப்பிடக்கூடியதாயிருந்தது.

சுத்தம் பேணுவதை . . . .

(1 பக்கத்து வளர்ச்சி)

திருத்தல். உணவு உண்டுபண்ணும் இடம் அதைப் பரிமாறும் இடம் என்பனவெல்லாம் சுத்தமாய் அமைய வேண்டும்.

ஆகவே யாத்திரிகர்கள் ஆரன் அடியார்களாய்ப் புண்ணிய செயலை செய்யும் பணியை மேற்கொள்ளும்பொழுது திருத்தலங்களும் திருத்தலங்களைச் சூழ இருக்கும் இடங்களும் யாவும் பரிபூரண சுத்தத்தானங்களாய் விளங்க முன் மாதிரி காட்டி ஏனையோரை வழிப்படுத்தவுங் கடமைப்பட்டவர்கள் ஆனோர்.

சிவானந்த நடனம்

(1-ம் பகத்து வளாச்சி)

தினங்களும் முன்னரே வெளியிட்ட நடராஜனின் "பூவைவிடு தூது" என்ற அரியநூலைப்பாடநூலாக விதிக்குமாறுமகூறினார்

சென்னை சென்று திரும்பிய திரு. நடராசன், தமிழ்நாடுகுருசாங்கம் தமிழ் வளர்ச்சிக்காகப் பிரமாண்டமான இடங்களை வகுத்துள்ளதெனவும், தமிழ்த் தொண்டில் ஈடுபட்டு வயதுமுதிர்ந்த அறிஞருக்குப்பெருந்தொகையை மாதாமாதம் சம்மானமாக வழங்கி வருவதெனவும், இலங்கையிலும் நமது இந்துபத்தியமுயற்சியால், தமிழவளர்ச்சிக்குப்பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறினார், நடராஜனின் பல நாடகங்களை இந்நாயக பத்திரிகைகளை, வெளியிட முன் வந்துள்ளன வென்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

அருள் தருவாயே!

(இயலிசை வாரிதி யாழ்ப்பாணம் ந. வீரமணி ஐயர்)

இராகம் - ஸஹானா தாளம் - ஆதி.

பல்லவி

தாயே வந்தருள் தருவாயே — மாயே !
நீயே துணையல்லாமல் நிலத்தினில்கதி யுமுண்டோ?

அநுபல்லவி

மாயனின் சோதரி மாதங்கி சுகுமாரி
நாயன்மார் கட்டிவளர் தாயே ராஜேஸ்வரி

சரணம்

பாதாரவிந்த மலர் பாடிப்பாடி உன்னை
ஆதாரமென் றடைந்தேன் ஆதிபரா சக்தி
மாதா மனோன்மணி மங்கள அபிராமி
வேதாகமங்கள் போற்றும் விசாலாக்ஷி மீனாக்ஷி.

The Jaffna Co-operative Stores Ltd.

420, Hospital Road ; : Jaffna.

WHEREAS Mrs. Ratnam Sabaratnam of Hospital Lane, Manipay, has applied to the Directors of the above named Company for the issue of a Duplicate Certificate in respect of Five (5) Ordinary Shares of Rs, 100/- each, numbered: 6071 - 6075; registered in her name, the original of which is represented to have been destroyed, lost or mislaid. NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for Duplicate Certificate, the original of which will be deemed to have been cancelled.

420, Hospital Road,
JAFFNA.
27th February 1981. (29)

T. SOMASUNDARAM,
Secretary

கோட்டு விற்பனவு விளம்பரம்.

சகு: 1859

வைத்திலிங்கம் கைம்பெண் செல்லம்மா மூளாய், சுழிபுரம் வழக்காளி,

எதிராக

நா. பொன்னம்பலம் பெண் சிவபாக்கியம் ஆறுமுகம் கைம்பெண் பொன் லுப்பிள்ளை மூளாய். சுழிபுரம்

எதிராளி.

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டின் M B 2859 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1981 ம் ஆம் பங்குனி மீ 3 ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி 2640/- பின் 29-1-79 தொடக்கம் 21-9-79 வரைக்கும் ரூபா 2000 - 00 க்கு 24% வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 % வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 505 சதம் 25,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரம் இறை வட்டுக் கலட்டி பரப்பு நிலை இலாச்சம் நாலும் கொட்டிலும் எல்லைகள் கிழக்கு நாகர் கிருஷ்ணர் பெண் நீலாட்சிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு மேற்கு ஒழுங்கை. தெற்கு கிருஷ்ணபிள்ளை பெண் இலட்சுமியின் ஆதனம். இந்த எல்லைப்படி இதடங்கலும்.

சி சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்.
தொல்புரம். 10-1-81.
(87)

கோட்டு விற்பனவு விளம்பரம்

சகு 2860

வைத்திலிங்கம் கைம்பெண் செல்லம்மா மூளாய் சுழிபுரம் — வழக்காளி

எதிராக

வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை பெண் இலட்சுமி பொன்னாலை சுழிபுரம் —எதிராளி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டின் M. B 2860 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை, 1981 ம ஆம் மாசி மாதம் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை பி, ப. 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் எனனால் விற்கப்படும்

தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 2640 -பின் 29-1-79 தொடக்கம் 10-8-79 வரைக்கும் ரூபா 1000 - க்கு 24% வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 508 சதம் 25

ஆதன விபரம்

வடமாகாணம் மல்லாகம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரம் இறை வட்டுக் கலட்டி பரப்பு நிலை இலாச்சம் முன்றேகாலும் வாழை பயிர்களும் செய்பயிர்களும் எல்லைகள் கிழக்கு முருகர் சோதிக்கும் பெண் வள்ளியம்மைக்கும் உரிய ஆதனம் வடக்கு பொன்னம் பலம் பெண் சிவபாக்கியத்தின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு நாகர் ஏரம்புவுக்கும் பெண் மனோமணிக்கும் உரிய ஆதனம் இந்த எல்லைப்படி இதடங்கலும் கிழக்கே இருக்கும் கிருஷ்ணர் பெண் நீலாட்சியின் ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் இருந்து இதற்குரிய பங்கும் தூரவைவழி வரக்கால் பாவி புரிந்தும்.

சி. சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்
தொல்புரம்
10-1-81 88

கடைத்தெரு விநாயகர் தேர்

யாழ் / வண்ணார்பண்ணை கடைத்தெரு வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் இரதோற்சவம் 24ஆம் திருவிழாவாகிய அன்று (18.2.81) வெகு சிறப்பாக நடைபெற்றது. காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையாகி 9 மணிக்கு விநாயகப் பெருமான் இரதத்தில் ஆரோகணித்தார். மாலை 4 மணியில் பச்சை சாத்துதலும் பஞ்சமூகார்ச்சனையும் நடைபெற்றன நாளை மாலை தீர்த்தோற்ஸவமும் அடுத்து பூங்காவன உற்சவமும் அடுத்து சண்டேசுவரர் உற்சவம் இடம் பெறுகின்றன.

யாழ். பெரியுலம் மகா வித்தியாலயம்

அபிவிருத்திச் சங்க உறுப்பினர்

12-2-81இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டவர்கள்

தலைவர்;
திரு. G. குணரத்தினம் (அதிபர்)

உபதலைவர்;
திரு. K. S. திரவியம்
திரு. எஸ். லோகநாதன்

செயலாளர்;
திரு. இ. பீதாம்பரம்
திரு. S. இராசேந்திரம்

தனாதிகாரி,
திரு. வ. கந்தசாமி

கணக்குப்பரிசோதகர்-
திரு. வே. சின்னத்துரை

A NOBLE SOUL

(continued from page 4)

gone leaving behind us poor sinners alone and helpless to bemoan his loss"

The family to which Mrs. Pasupati and the family to which Dr. Pasupati belonged and the entire family group had the special blessing of the Sage and Saint Sri La Sri Yoga Swamigal.

For the information of the present generation some of whom may not know Physician Sri Muthucumaru, it could be said that he occupied a position in the public life of the Tamils of Sri Lanka similar to that occupied by Dr. Bidhan Chandra Ray of Bengal as physician to the great political leaders of India including Mahatma Gandhi, the Nehru family, Desabandu C. R. Das and and their colleagues.

To those who may not remember Yoga Swamigal it could be recalled that he was a great mystic and saint, who inter alia, was a patriot of Sri Lanka, apart from being an internationalist, and who is responsible for a moving hymn in Tamil.

"Ceylon is our beloved country, Love it, Adore it"

(To be continued)

Hindu Organ

Friday, 20 - 2 - 81

CAUSEWAY — GOOD CAUSE FOR SRAMADHANA SERVICE

The enterprising effort of the Government Agent of the Jaffna District who is also the Secretary to the District Minister has done well in ceremoniously starting the continuation of the Mahadeva Causeway Project and in enlisting the meaningful co - operation of the public by means of Shramadhana.

It is now the turn of the people to pull their whole weight of active assistance in favour of the Causeway Project and to keep the effort of the Administration in full and continuing swing so that before long the Mannar Mainland. Poonakary - Peninsula route of direct transport would be an accomplished affair that will benefit not merely agriculturalists but also religious devotees who make periodical pilgrimages to Holy Shrines such as Thiruketeswaram and Madhu besides other ancient temples, churches and similar places of worship.

The Shramadhana Service that has been thoughtfully inspired by the duty conscious Government Agent must now form the Corner Stone for all similar projects that have been lying uncared for under the pretext of unavailability of funds. The public purse will yield itself for full use if only the fund of good will and co - operation of the public by way of Shramadhana would be available.

Public Projects are for the public. and who are the public? – the people themselves who clamour for these facilities Hence the basis of work in this connection must necessarily be in the form of Public Service - cum People (Shramadhana Service) If this idea could be accepted as an ideal then no project need suffer the fate of abeyance or even abandonment for want of diligence and duty – consciousness.

We take pride in repeating in these columns the utility of the Mahadeva Causeway particularly in the context of the need for proper facilities of transport for pilgrims. It is an accepted theory that religious practice can be sustained by a rich harvest. Should we stress the need for facilities for cultivators in the Mainland whose homes are in the Peninsula to enable the prospect of a prosperous yield of paddy, grains and other produce,

Shramadhana Service must be strengthened. We commend the call for early enlistment in the cause of Religion.

SOVEREIGN REMEDY

The editorial in the Hindu Organ of 9-1-81 under the caption "Taking stock of the situation" is very suggestive and helpful. The concluding paragraphs contain the sum and substance of Hindu Existence. For purposes of brevity, to avoid much space in the limited columns of the esteemed journal, I quote the following sentences only from the editorial :-

"Years may come and years may go but this demoralization will go on The only way of hope is in religious practice.... Resolve to be religious"

It is fervently trusted that this invaluable admonition would to some degree influence the public, not only of Sri Lanka but the whole world.

In the same issue of the paper, the very inspiring and illuminating continuation of the subject of Hindu Cultural Traditions from the learned and pious devotee, Mrs Ratna Navaratnam, former Director of Education appears

The editorial and the article referred to along with other items in the paper together constitute a combined effort for our spiritual, religious and temporal progress and salvation, worthy of being infallible guides for the New Year and for all times. May Parameswara in His Infinite Grace vouchsafe to us the capacity to follow the lead given in the editorial and the article by Mrs. Navaratnam. It is also a further prayer from the humble undersigned that the writers of the editorial and the articles be preserved well and long to continue to give us information, guidance and inspiration and the Hindu Organ, Inthusathanam and the Saiva Paripalana Sabhai be strengthened for ever, increasing Service to God, Religion, Country, Mankind, and all Creation with the happy advent of Thaipongal

தை பிறந்தால் வழி பிறக்கும் is an immemorial adage in Hindu tradition. May Almighty Shiva Peruman in His all merciful – Dispensation bless the Hindu Community to rise to greater heights to secure itself and the whole world and make the Saiva Paripalana Sabhai and the Hindu Organ and the Inthusathanam. one of His innumerable mediums for such purpose in the cause of International Welfare, Co - operation

Peace and goodwill and in all manner incomprehensible to us ordinary moral beings.

(By Sri S. Sivasubramaniam)
Life Member,
Jaffna Saiva Paripalana Sabhai.
18-1-81

"DISCIPLINE"

By M. Eliathamby, B.A. [Lond]

There is peace and harmony in a society if its members imbued with, high moral and human values discharge their duties and obligations accordingly. Respect for high values engendered by culture, tradition, learning and environment are conspicuous among members of a society with a good background. The home and the school play an important role in providing the chief back ground for making a citizen an asset and not a liability on the society

At a time when highway robbery and wanton and irresponsible acts repugnant to good human values are committed without fear, one has to pause a while to examine the causes that motivate the doers. The home and the school come to the fore-front in that respect. The atmosphere in the homes is a potent factor towards the behaviour of the children. Honesty, truth, uprightness, punctuality, regard for others properties, sympathy for others and kindness to all living beings are certainly noble qualities to be acquired by a child from its young age. If the father, mother, brothers and sisters in whose environment the child grows from birth behave in accordance with the high human values, the child imbibes them unconsciously. Pilfering, speaking falsehood, inflicting pains on others, destruction of public property and scant respect for human lives are qualities quite alien, to a child who comes from a family which has high regard for noble qualities. Neither poverty nor possession of wealth can change the conduct and behaviour of those who adhere strictly to high values and principles. If a child goes wrong, the father corrects it by strict warning and by exhortation. But on the other hand a child from a bad home is never guid d in the correct direction as the home itself is lacking in such high qualities to correct the child.

When children from two types of homes go to school, the child from the good home submits himself to the discipline of the school voluntarily whereas the other child finds it difficult to adjust himself in a changed environment. It is a duty incumbent on the teachers and principals to improve that child by various devices.

Discipline may be classified as external discipline and self - discipline Children are expected to follow the traditional and general rules of the school relative to regular attendance, punctuality, honesty, good conduct etc Then there is also the class discipline. Teachers who go to the classes are expected to maintain discipline by guiding, advising, by efficient teaching and sometimes even inflicting slight physical pain with an intention to improve the child Negligence in the part of any teacher who goes to the class tends to make his efforts fruitless both in respect of his teaching and in helping the child to de-velop a good character. Paying close attention to his work and by taking interest in such individual child and by showing readiness to understand children's problems. the teacher can easily command the respect of the children. In short the tradition, the general tone and standard of the school play an important part in helping the children to submit themselves to the rules of discipline of the class and school.

Such external discipline should ultimately help students to learn gradually self - discipline. That is the chief object of the external discipline. There is no need for parents to be anxious about the future of their children if they are brought under proper discipline from young age till they acquire self - discipline.

A NOBLE SOUL

By *S. Sivasubramaniam*

God has removed from our midst at the age of 81 a good and great person whom He vouchsafed to the people of Sri Lanka, Dr V. T. Pasupati to whom reference is sought to be made by the humble undersigned was a noble minded gentleman with rare qualities of the head and heart, coming from a distinguished family noted for religious devotion, public spirit, and amiable nature. The deceased personality was an ornament to our Society and highly respected for his medical skill, honourable character, and rare excellence with capacity and willingness to render assistance. His spouse was equally and is herself a paragon. He was married to the eldest daughter of one of the noblest and greatest and most pious sons of Sri-Lanka, Ayurvedic physicians, Pariyariar Sri Kasturiar Muthucumaru at whose demise the revered Sir Ponnambalam Ramanathan uttered the memorable tribute:-

"The great Puniya purushan (benefactor) has

(continued in page 3)

வானமுகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேனமைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone: 336) on Friday, 20-2-1981

Editor-in-Chief:
R. N. Sivapirakasam